பாலியல் புகார்: இருவர் கைது

■ கும்பகோணம், ஜூன் 26–

குடந்தை அருகே ஒரு கிராமத்தில் மனநலம் பாதிக்கப்பட்ட 38 வயதுள்ள பெண் வசித்துள்ளார். இந்நிலையில் அந்தப் பெண் தனியாக இருந்தபோது அதே பகுதியை சேர்ந்த கூலி தொழிலாளியான பாக்யராஜ் (40), பாலியல் தொல்லை கொடுத்துள்ளார். இதையறிந்த மனநலம் பாதிக்கப்பட்ட பெண்ணின் உறவினர்கள் குடந்தை அனைத்து மகளிர் போலீஸ் ஸ்டேஷனில் புகார் செய்தனர். மகளிர் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெயலட்சுமி மற்றும் போலீசார் பாக்யராஜை கைது செய்து சிறையில் அடைத்தனர். இதேபோல் குடந்தை அருகே மற்றொரு கிராமத்தை சேர்ந்த 10 வயது சிறுமிக்கு, கூலி தொழிலாளியான சேகர் (52), பாலியல் தொல்லை கொடுத்துள்ளார். இதுபற்றி சிறுமியின் தாயார் கொடுத்த புகாரின் பேரில் குடந்தை அனைத்து மகளிர் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெயலட்சுமி மற்றும் போலீசார் போக்சோ சட்டத்தின் கீழ் சேகரை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

தகராறில் மனைவி கொலை கணவர் தற்கொலை முயற்சி

■ ஒரத்தநாடு, ஜூன் 26–

பட்டுக்கோட்டை ஆதி தெருவை சேர்ந்தவர் நாகராஜ்(39). இவரது மனைவி சத்யா(36). இவர்களுக்கு இரண்டு பெண் குழந்தை மற்றும் இரண்டு ஆண் குழந்தைகள் உள்ளனர். இருவரும் மினி ஆட்டோவில் கிராமங்களுக்கு சென்று பழைய இரும்பு, பிளாஸ்டி பொருட்கள் சேகரித்து வந்து விற்பனை செய்து வருகின்றனர். சம்பவத்தன்று தொழிலுக்காக ஏனாதி செல்லியம்மன் கோவில் அருகே செல்லும்போது இருவருக்கும் ஏற்பட்ட வாய் தகராறில் நாகராஜன், மனைவி சத்யாவை கத்தியால் குத்தியதில் சத்யா சம்பவ இடத்திலேயே பரிதாபமாக இறந்தார். மனைவி இறந்த சம்பவம் அறிந்த நாகராஜ், கத்தியால் கை மற்றும் கழுத்தை அறுத்து கொண்டு உயிருக்கு ஆபத்தான நிலையில் தஞ்சை மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர்.இதுகுறித்து திருவோணம் இன்ஸ்பெக்டர் முத்து, சப்இன்ஸ்பெக்டர் முத்துக்குமார் மற்றும் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

கபிஸ்தலம் காவிரியாற்று பாலத்தில் பழுதை சீரமைக்க கோரிக்கை

■ கபிஸ்தலம், ஜூன் 26–

கபிஸ்தலம் காவிரி பாலம் அருகில் பலவீனமான சாலையால் பெரும் விபத்து ஏற்படும் முன் சீரமைக்க பொதுமக்கள் கோரிக்கை விடுத்தனர்.

பாபநாசம் தாலுகா பகுதிக்கு உட்பட்ட கபிஸ்தலம் பாபநாசம் சாலையை இணைக்கும் விதமாக பழமையான நான்கு பாலங்கள் அமைந்துள்ளன.இதில் முதலாவதாக கபிஸ்தலம் காவிரி பாலம் உள்ளது.இப்பாலத்தின் தென் புற இறுதிப் பகுதியை இணைக்கும் தார் சாலையின் உட்புறம் மழை நீரால் அறுத்தோடி குகை போல் காட்சி அளிக்கிறது. சாலையின் மேற்புறம் இயல்பாக தெரியும் பட்சத்தில் அதன் உள்புறம் மிகவும் பலவீனமாக உள்ளது.இதனை அறியாமல் கனரக வாகனங்கள் இதன் மீது இயக்கப்படும் பட்சத்தில் பெரும் விபத்து ஏற்படும் அபாயம் உள்ளது.மேலும் பள்ளத்தில் விழாமல் இருக்க இவ்விடத்தில் அமைக்கப்பட்டிருந்த பாதுகாப்பு தடுப்பு அரண் குழாய் பதிக்கும் பணியின் போது அகற்றப்பட்டு இதுவரை மீண்டும் அமைக்கப்படாத காரணத்தால் நிலைத்தடுமாறும் வாகனங்களை தாங்கி நிறுத்தும் தடுப்பு அரண் இல்லாததால் அருகிலுள்ள பள்ளத்தில் வாகனங்கள் விழும் அபாயம் உள்ளது.

கபிஸ்தலம் காவிரி பாலத்தின் தென்புறம் இறுதிப் பகுதியை இணைக்கும் தார் சாலை மழையால் அரிக்கப்பட்டு பலவீனம் அடைந்துள்ளது.

இந்நிலையில் பொது மக்களின் இயல்பான போக்குவரத்திற்கு அடித்தளமாக விளங்கும் இந்த சாலை பாதிக்கப்படும் பட்சத்தில் கபிஸ்தலம் பாபநாசம் தொடர்புச் சங்கிலி துண்டிக்கப்பட்டு ஒட்டுமொத்த போக்குவரத்து பாதிப்பை இப்பகுதி மக்கள் சந்திக்க நேரிடும் அபாயம் உள்ளது.

மேலும் இந்த பகுதியில் கொட்டப்படும் கோழி கழிவுகள் மற்றும் இதர கழிவு பொருட்களால் இப்பகுதி துர்நாற்றம் எடுத்து பொதுமக்களுக்கு தொற்றுநோய் ஏற்படும் அபாயத்தை விளைவிக்கும் விதமாக உள்ளது.எனவே பெரும் விபத்து மற்றும் தொற்றுநோய் ஏற்படுவதற்கு முன்பாக நெடுஞ்சாலை துறையினர், சுகாதாரத் துறையினர் இவ்விடத்தை ஆய்வு செய்து உடனடியாக சாலையின் உட்புற கட்டமைப்பை மேம்படுத்தி பாதுகாப்பான போக்குவரத்திற்கு வழிவகை செய்ய வேண்டும் என இப்பகுதியை சேர்ந்த சமூக ஆர்வலர்கள் மற்றும் பொது மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி

■ ஆடுதுறை, ஜூன் 26–

ஆடுதுறை, திருப்பனந்தாள், பந்தநல்லூரில் போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி நடந்தது.

பந்தநல்லூரில் போலீஸ் இன்ஸ்பெக்டர் ராஜா தலைமையில் போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி நடந்தது. ஆடுதுறை கே.ஜி எஸ் மேல்நிலைப் பள்ளியில் மாணவ, மாணவிகள் பங்கேற்ற போதைப் பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணியை டிஎஸ்பி அழகேசன் கொடியசைத்து தொடங்கி வைத்தார். இன்ஸ்பெக்டர் மீனா முன்னிலை வகித்தார். போதைப் பொருள் இல்லாத சமுதாயத்தை கட்டமைப்போம் என உறுதிமொழி ஏற்றனர்.

ஆடுதுறையில் கே.ஜி.எஸ். மேல்நிலைபள்ளி மாணவர்கள் பங்கேற்ற போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணியை டிஎஸ்பி அழகேசன் தொடங்கி வைத்து உறுதிமொழி ஏற்றார். அருகில் இன்ஸ்பெக்டர் மீனா மற்றும் ஆசிரியர்கள்.

திருப்பனந்தாளில் போலீஸ் இன்ஸ்பெக்டர் குமார் தலைமையில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மேல்நிலை பள்ளி மாணவர்கள் பங்கேற்ற போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி நடந்தது.

சுவாமிமலை: சுவாமிமலை காவல் நிலையம் சார்பில் போதை பொருளுக்கு எதிரான விழிப்புணர்வு பேரணி நடந்தது. சுவாமிமலை போலீஸ் இன்ஸ்பெக்டர் செந்தில்குமார் தலைமையில் அரசு மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் போதைப் பொருளுக்கு எதிரான விழிப்புணர்வு பேரணியை நடத்தினர். சிறப்பு இன்ஸ்பெக்டர் முருகேசன், தலைமை காவலர்கள் சங்கர், கீதா ஆகியோர் முன்னிலை வகித்தனர். போதைப் பொருளுக்கு எதிரான விழிப்புணர்வு பதாகைகள் ஏந்தி மாணவர்கள் முக்கிய வீதிகள் வழியாக வலம் வந்தனர்.

திருக்காட்டுப்பள்ளி: இதேபோல திருக்காட்டுப்பள்ளி போலீசாரும் அரசு உதவி பெறும் மேல்நிலைப்பள்ளி இணைந்து விழிப்புணர்வு பேரணி இன்ஸ்பெக்டர் சோம சுந்தரம் தலைமையில் நடந்தது . சர் சிவசாமி அய்யர் அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளியிலிருந்து கடைவீதி, முக்கிய வீதிகள் வழியாக பழமார் நேரி காவிரி ஆற்று பாலம் வரைசென்று விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

செல் டவர் அமைக்க எதிர்த்து சாலை மறியல்

■ கும்பகோணம், ஜூன்.26–

குடந்தை மாநகராட்சி கொட்டையூரில் 300க்கும் அதிகமான குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். இந்நிலையில் கொட்டையூரில் புதிதாக செல்போன் டவர் அமைக்கும் பணியில் தனியார் நிறுவனத்தை சேர்ந்தவர்கள் ஈடுபட்டுள்ளனர். இதையறிந்த பொது மக்கள், புதிதாக செல்போன் டவர் அமைக்க எதிர்ப்பு தெரிவித்தும், கர்ப்பிணி பெண்கள், முதியவர்கள் மற்றும் குழந்தைகள் கதிர் வீச்சு பாதிப்புக்குள்ளாகி விடுவார்கள் என்று எதிர்ப்பு தெரிவித்து வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். தொடர்ந்து சுவாமிமலை சாலையில் மறியலில் ஈடுபட்டனர். தாசில்தார் பூங்கொடி, கிழக்கு போலீஸ் இன்ஸ்பெக்டர் இளையராஜா ஆத்மநாதன் ஆகியோர் மறியலில் ஈடுபட்ட பொது மக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். தொடர்ந்து செல்போன் டவர் அமைக்கும் இடத்தையும் பார்வையிட்டனர். இருப்பினும் பொதுமக்கள், அதிகாரிகளின் பேச்சுவார்த்தையில் சமாதானம் ஆகாமல் தொடர்ந்து மறியலில் ஈடுபட்டதால் போலீசார் சாலைமறியலில் ஈடுபட்ட 30 பேரை கைது செய்து தனியார் திருமண மண்டபத்தில் தங்க வைத்தனர்.

பள்ளியில் கழிவறை கட்டடம் திறப்பு

■ பேராவூரணி, ஜூன் 26–

பேராவூரணி வடகிழக்கு ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் சென்னை காளீஸ்வரி பவுண்டேஷன் சார்பில் ரூ.2.50 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட கழிப்பறைகள் திறப்பு விழா நடந்தது.காளீஸ்வரி பவுண்டேஷன் அலுவலர் உமா தலைமை வகித்தார். மாணவர்கள் பயன்பாட்டிற்கு கழிப்பறைகள் திறந்து வைக்கப்பட்டது. தொடர்ந்து காளீஸ்வரி பவுண்டேஷன் அலுவலர் உமாவுக்கு பள்ளி நிர்வாகத்தின் சார்பில் நினைவுப் பரிசு வழங்கப்பட்டது. பேரூராட்சித் தலைவர் சாந்தி, கவுன்சிலர் ஹபீபாபானூக், டாக்டர் நீலகண்டன், பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் கௌதமன், பள்ளி மேலாண்மை குழுத் தலைவர் நித்யா, ஆசிரியர் பயிற்றுநர் சாஜிதாபானு மற்றும் பலர் கலந்து கொண்டனர். பள்ளித் தலைமை ஆசிரியர் சந்திரசேகரன் வரவேற்றார். ஆசிரியர் காஜா முகைதீன் நன்றி கூறினார்.

வேளாண் கடன்களை நிபந்தனையின்றி தள்ளுபடி செய்ய பாமக கூட்டத்தில் கோரிக்கை

■ கும்பகோணம், ஜூன் 26–

குடந்தையில் பாமக தஞ்சை வடக்கு மாவட்ட செயற்குழு கூட்டம் நடந்தது.

மாவட்ட துணைத்தலைவர் செந்தில்குமார் தலைமை வகித்தார். மாவட்ட செயலாளர் கலியமூர்த்தி வரவேற்றார்.

மாநில இளைஞர் சங்க துணைத் தலைவர் அமிர்தகண்ணன், துணைச்செயலாளர் வினோத்சுந்தரம், கீதா, வீரம்மாள் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தமிழ்நாடு உழவர் பேரியக்க மாநிலத்தலைவர் ஆலயமணி, மாநில இளைஞர் சங்க செயலாளர் வெங்கட்ராமன், மாநில கொள்கை விளக்க துணை செயலாளர் ராஜசேகரன் ஆகியோர் கலந்துகொண்டனர். மேகதாதுவில் காவிரியின் குறுக்கே அணை கட்ட முயற்சிக்கும் கர்நாடக அரசை கண்டித்து ஜூலை 4ம்தேதி பாமக தலைவர் அன்புமணி நடைபயணமாக குடந்தைக்கு வந்து பரப்புரை மேற்கொள்கிறார். குடந்தை, திருவிடைமருதூர் தாலுகாவில் உள்ள அனைத்து பாசன வடிகால்களையும் தூர்வார வேண்டும்.அனைத்து விவசாய கடன்களையும் நிபந்தனையின்றி தள்ளுபடி செய்யவேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

உழவர் பேரியக்க மாவட்ட செயலாளர் ஆனந்தராஜ் நன்றி கூறினார்.

குடந்தையில் நடந்த பாமக மாவட்ட செயற்குழு கூட்டத்தில் உழவர் பேரியக்க மாநிலத்தலைவர் ஆலயமணி பேசினார். அருகில் மாவட்ட செயலாளர் கலியமூர்த்தி மற்றும் பலர்.

நுண்ணீர் பாசன திட்டத்தில் பயன்பெற விண்ணப்பிக்கலாம்

■ பாபநாசம், ஜூன் 26–

பாபநாசம் வட்டார தோட்டக் கலை உதவி இயக்குனர் வினோதா வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: பாபநாசம் வட்டாரத்தில் விவசாயிகளுக்கு 26 27 ம் ஆண்டிற்கான நுண்ணீர் பாசன இலக்கு பொது இனத்தில் 16 ஹெக்டேர், ஆதி இனத்தில் 4 ஹெக்டேர் எனவும், நிதி இலக்கு பொது 8.40 லட்சங்களும், ஆதி 2.10 இலட்சங்களும் பெறப் பட்டுள்ளது.

அரசால் அங்கீகரிக்கப் பட்ட நிறுவனத்தின் மூலம் சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியத்திலும், மற்ற விவசாயிகளுக்கு 75 சதவீத மானியத்திலும் பாசன கட்டமைப்பு வசதி ஏற்படுத்தி தரப்படும். ஆதி திராவிடர், பழங் குடியினர் மற்றும் பெண் விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கப் படும். மானியத்தில் சொட்டு நீர் பாசனம் அமைத்திருந்தாலும், 7 ஆண்டுகள் முடிந்திருந்த பின்பு, மீண்டும் அதே நிலத்தில் சொட்டு நீர் பாசனம் மானியத்தில் அமைத்துக் கொள்ளலாம். தெளிப்பு பாசனம் அமைத்த விவசாயிகள் 3 ஆண்டிற்குப் பின்னர் தேவை ஏற்படின் அதற்குப் பெற்ற மானியத்தை குறைத்துக் கொண்டு, சொட்டு நீர் பாசனம் அமைத்துக் கொள்ளலாம். இந்தத் திட்டத்தில் பயன் பெறும் விவசாயிகள் ஆதார், ரேஷன் கார்டு, புகைப்படம், சிட்டா அடங்கல், வங்கி கணக்கு புத்தகம், நில வரைபடம், சிறு, குறு விவசாய சான்று ஆகியவற்றுடன் பாபநாசம் வட்டார தோட்டக் கலை உதவி இயக்குனர் அலுவலகத்தை நேரில் அணுகலாம். இவ்வாறு அதில் கூறப் பட்டுள்ளது.

மாண்பமை சார்பு நீதிமன்றம், மன்னார்குடி.
I.A.No.4/2025 in O.S.No.16/2014
கோவிந்தராஜன் (இறந்தார்)
1.விஜயலெட்சுமி, 2.சுவேதா
...மனுதாரர்கள்/
இறந்த வாதியின் வாரிசுதாரர்கள் எதிர்
10. சின்னராஜன், த/பெ.சௌந்தர்ராஜ் எண். 72, மீன் மார்க்கெட் ரோடு, புதிய பேருந்து நிலையம் அருகில், கும்பகோணம் தாலுக்கா, தஞ்சாவூர் மாவட்டம்.
11. லெட்சுமிபிரியா, த/பெ. சின்னராஜன், க/பெ.செல்வகுமார் எண். 72, மீன் மார்க்கெட் ரோடு, புதிய பேருந்து நிலையம் அருகில், கும்பகோணம் தாலுக்கா, தஞ்சாவூர் மாவட்டம்.
12. சித்ரா, த/பெ.சின்னராஜன், க/பெ.ராமபிரபு, எண். 72, மீன் மார்க்கெட் ரோடு, புதிய பேருந்து நிலையம் அருகில், கும்பகோணம் தாலுக்கா, தஞ்சாவூர் மாவட்டம்.
13. சீனிவாசன், த/பெ.சின்னராஜன், எண். 72, மீன் மார்க்கெட் ரோடு, புதிய பேருந்து நிலையம் அருகில், கும்பகோணம் தாலுக்கா, தஞ்சாவூர் மாவட்டம்.
...10,11,12,13 எதிர்மனுதாரர்கள் / 3-ம் பிரதிவாதியின் வாரிசுதாரர்கள் அறிவிப்பு
மேற்படி வழக்கு பாகப்பிரிவினை பரிகாரம் கோரிவாதியால்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஷை அசல் வழக்கில் 3-ம் பிரதிவாதி இறந்து விட்டபடியால் அவரது வாரிசுதாரர்களை அசல் வழக்கில் 10 முதல் 13 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளாக சேர்க்க மனு அளிக்கப்பட்டு மேற்படி மனுவின் அடிப்படையில் பலமுறை நீதிமன்றம் மூலமாகவும், அஞ்சல் வழி மூலமாகவும் சம்மன் அனுப்பப்பட்டு, அனுப்பப்பட்ட சம்மன் சர்வ் ஆகாததால் திரும்ப வந்துவிட்டது. ஷை 10 முதல் 13 எதிர்மனுதாரர்கள்/3-ம் பிரதிவாதியின் வாரிசுதாரர்கள் ஆகியோருக்கு வழக்கில் சம்மன் சர்வ் செய்யும் பொருட்டு 10 முதல் 13 எதிர்மனுதாரர்கள் கடைசியாக வாழ்ந்த முகவரிக்கு தினசரி நாளிதழில் விளம்பரம் செய்ய சமூகம் நீதிமன்றத்தார் அவர்களால்உத்தரவிடப்பட்டுள்ளது.ஷை உத்தரவிற்கிணங்க10 முதல் 13 எதிர்மனுதாரர்கள் / 3-ம் பிரதிவாதியின் வாரிசுதாரர்கள் மேற்கண்ட வழக்கில் மேற்கண்ட நீதிமன்றத்தில் வருகின்ற **14.07.2026-ம்** தேதி காலை 10.30 மணிக்கு நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி ஆட்சேபனை தெரிவிக்கலாம். தவறும்பட்சத்தில்யாருக்கும்ஆட்சேபனை இல்லை என்று வழக்கில் ஒரு தலைபட்ச உத்தரவுபிறப்பிக்கப்படும் என்பதைஇதன் மூலம் அறியவும்.
S.விஜயன், வழக்கறிஞர்

மாண்பமை சார்பு நீதிமன்றம், மன்னார்குடி.
I.A.No.5/2025 in O.S.No.16/2014
கோவிந்தராஜன் (இறந்தார்)
1.விஜயலெட்சுமி, 2.சுவேதா
...மனுதாரர்கள்/
இறந்த வாதியின் வாரிசுதாரர்கள் எதிர்
10. சின்னராஜன், த/பெ.சௌந்தர்ராஜ் எண். 72, மீன் மார்க்கெட் ரோடு, புதிய பேருந்து நிலையம் அருகில், கும்பகோணம் தாலுக்கா, தஞ்சாவூர் மாவட்டம்.
11. லெட்சுமிபிரியா, த/பெ. சின்னராஜன், க/பெ.செல்வகுமார் எண். 72, மீன் மார்க்கெட் ரோடு, புதிய பேருந்து நிலையம் அருகில், கும்பகோணம் தாலுக்கா, தஞ்சாவூர் மாவட்டம்.
12. சித்ரா, த/பெ.சின்னராஜன், க/பெ.ராமபிரபு, எண். 72, மீன் மார்க்கெட் ரோடு, புதிய பேருந்து நிலையம் அருகில், கும்பகோணம் தாலுக்கா, தஞ்சாவூர் மாவட்டம்.
13. சீனிவாசன், த/பெ.சின்னராஜன், எண். 72, மீன் மார்க்கெட் ரோடு, புதிய பேருந்து நிலையம் அருகில், கும்பகோணம் தாலுக்கா, தஞ்சாவூர் மாவட்டம்.
...10,11,12,13 எதிர்மனுதாரர்கள் / 3-ம் பிரதிவாதியின் வாரிசுதாரர்கள் அறிவிப்பு
மேற்படி வழக்கு பாகப்பிரிவினை பரிகாரம் கோரிவாதியால்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஷை அசல் வழக்கில் 3-ம் பிரதிவாதி இறந்து விட்டபடியால் அவரது வாரிசுதாரர்களை அசல் வழக்கில் 10 முதல் 13 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளாக சேர்க்க மனு அளிக்கப்பட்டு மேற்படி மனுவின் அடிப்படையில் பலமுறை நீதிமன்றம் மூலமாகவும், அஞ்சல் வழி மூலமாகவும் சம்மன் அனுப்பப்பட்டு, அனுப்பப்பட்ட சம்மன் சர்வ் ஆகாததால் திரும்ப வந்துவிட்டது. ஷை 10 முதல் 13 எதிர்மனுதாரர்கள்/3-ம் பிரதிவாதியின் வாரிசுதாரர்கள் ஆகியோருக்கு வழக்கில் சம்மன் சர்வ் செய்யும் பொருட்டு 10 முதல் 13 எதிர்மனுதாரர்கள் கடைசியாக வாழ்ந்த முகவரிக்கு தினசரி நாளிதழில் விளம்பரம் செய்ய சமூகம் நீதிமன்றத்தார் அவர்களால்உத்தரவிடப்பட்டுள்ளது.ஷை உத்தரவிற்கிணங்க10 முதல் 13 எதிர்மனுதாரர்கள் / 3-ம் பிரதிவாதியின் வாரிசுதாரர்கள் மேற்கண்ட வழக்கில் மேற்கண்ட நீதிமன்றத்தில் வருகின்ற **14.07.2026-ம்** தேதி காலை 10.30 மணிக்கு நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி ஆட்சேபனை தெரிவிக்கலாம். தவறும்பட்சத்தில்யாருக்கும்ஆட்சேபனை இல்லை என்று வழக்கில் ஒரு தலைபட்ச உத்தரவுபிறப்பிக்கப்படும் என்பதைஇதன் மூலம் அறியவும்.
S.விஜயன், வழக்கறிஞர்

மாண்பமை சார்பு நீதிமன்றம், மன்னார்குடி.
I.A.No.6/2025 in O.S.No.16/2014
கோவிந்தராஜன் (இறந்தார்)
1.விஜயலெட்சுமி, 2.சுவேதா
...மனுதாரர்கள்/
இறந்த வாதியின் வாரிசுதாரர்கள் எதிர்
10. சின்னராஜன், த/பெ.சௌந்தர்ராஜ் எண். 72, மீன் மார்க்கெட் ரோடு, புதிய பேருந்து நிலையம் அருகில், கும்பகோணம் தாலுக்கா, தஞ்சாவூர் மாவட்டம்.
11. லெட்சுமிபிரியா, த/பெ. சின்னராஜன், க/பெ.செல்வகுமார் எண். 72, மீன் மார்க்கெட் ரோடு, புதிய பேருந்து நிலையம் அருகில், கும்பகோணம் தாலுக்கா, தஞ்சாவூர் மாவட்டம்.
12. சித்ரா, த/பெ.சின்னராஜன், க/பெ.ராமபிரபு, எண். 72, மீன் மார்க்கெட் ரோடு, புதிய பேருந்து நிலையம் அருகில், கும்பகோணம் தாலுக்கா, தஞ்சாவூர் மாவட்டம்.
13. சீனிவாசன், த/பெ.சின்னராஜன், எண். 72, மீன் மார்க்கெட் ரோடு, புதிய பேருந்து நிலையம் அருகில், கும்பகோணம் தாலுக்கா, தஞ்சாவூர் மாவட்டம்.
...10,11,12,13 எதிர்மனுதாரர்கள் / 3-ம் பிரதிவாதியின் வாரிசுதாரர்கள் அறிவிப்பு
மேற்படி வழக்கு பாகப்பிரிவினை பரிகாரம் கோரிவாதியால்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஷை அசல் வழக்கில் 3-ம் பிரதிவாதி இறந்து விட்டபடியால் அவரது வாரிசுதாரர்களை அசல் வழக்கில் 10 முதல் 13 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளாக சேர்க்க மனு அளிக்கப்பட்டு மேற்படி மனுவின் அடிப்படையில் பலமுறை நீதிமன்றம் மூலமாகவும், அஞ்சல் வழி மூலமாகவும் சம்மன் அனுப்பப்பட்டு, அனுப்பப்பட்ட சம்மன் சர்வ் ஆகாததால் திரும்ப வந்துவிட்டது. ஷை 10 முதல் 13 எதிர்மனுதாரர்கள்/3-ம் பிரதிவாதியின் வாரிசுதாரர்கள் ஆகியோருக்கு வழக்கில் சம்மன் சர்வ் செய்யும் பொருட்டு 10 முதல் 13 எதிர்மனுதாரர்கள் கடைசியாக வாழ்ந்த முகவரிக்கு தினசரி நாளிதழில் விளம்பரம் செய்ய சமூகம் நீதிமன்றத்தார் அவர்களால்உத்தரவிடப்பட்டுள்ளது.ஷை உத்தரவிற்கிணங்க10 முதல் 13 எதிர்மனுதாரர்கள் / 3-ம் பிரதிவாதியின் வாரிசுதாரர்கள் மேற்கண்ட வழக்கில் மேற்கண்ட நீதிமன்றத்தில் வருகின்ற **14.07.2026-ம்** தேதி காலை 10.30 மணிக்கு நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி ஆட்சேபனை தெரிவிக்கலாம். தவறும்பட்சத்தில்யாருக்கும்ஆட்சேபனை இல்லை என்று வழக்கில் ஒரு தலைபட்ச உத்தரவுபிறப்பிக்கப்படும் என்பதைஇதன் மூலம் அறியவும்.
S.விஜயன், வழக்கறிஞர்

மாண்பமை சார்பு நீதிமன்றம், மன்னார்குடி.
I.A.No.7/2025 in O.S.No.16/2014
கோவிந்தராஜன் (இறந்தார்)
1.விஜயலெட்சுமி, 2.சுவேதா
...மனுதாரர்கள்/
இறந்த வாதியின் வாரிசுதாரர்கள் எதிர்
10. சின்னராஜன், த/பெ.சௌந்தர்ராஜ் எண். 72, மீன் மார்க்கெட் ரோடு, புதிய பேருந்து நிலையம் அருகில், கும்பகோணம் தாலுக்கா, தஞ்சாவூர் மாவட்டம்.
11. லெட்சுமிபிரியா, த/பெ. சின்னராஜன், க/பெ.செல்வகுமார் எண். 72, மீன் மார்க்கெட் ரோடு, புதிய பேருந்து நிலையம் அருகில், கும்பகோணம் தாலுக்கா, தஞ்சாவூர் மாவட்டம்.
12. சித்ரா, த/பெ.சின்னராஜன், க/பெ.ராமபிரபு, எண். 72, மீன் மார்க்கெட் ரோடு, புதிய பேருந்து நிலையம் அருகில், கும்பகோணம் தாலுக்கா, தஞ்சாவூர் மாவட்டம்.
13. சீனிவாசன், த/பெ.சின்னராஜன், எண். 72, மீன் மார்க்கெட் ரோடு, புதிய பேருந்து நிலையம் அருகில், கும்பகோணம் தாலுக்கா, தஞ்சாவூர் மாவட்டம்.
...10,11,12,13 எதிர்மனுதாரர்கள் / 3-ம் பிரதிவாதியின் வாரிசுதாரர்கள் அறிவிப்பு
மேற்படி வழக்கு பாகப்பிரிவினை பரிகாரம் கோரிவாதியால்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஷை அசல் வழக்கில் 3-ம் பிரதிவாதி இறந்து விட்டபடியால் அவரது வாரிசுதாரர்களை அசல் வழக்கில் 10 முதல் 13 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளாக சேர்க்க மனு அளிக்கப்பட்டு மேற்படி மனுவின் அடிப்படையில் பலமுறை நீதிமன்றம் மூலமாகவும், அஞ்சல் வழி மூலமாகவும் சம்மன் அனுப்பப்பட்டு, அனுப்பப்பட்ட சம்மன் சர்வ் ஆகாததால் திரும்ப வந்துவிட்டது. ஷை 10 முதல் 13 எதிர்மனுதாரர்கள்/3-ம் பிரதிவாதியின் வாரிசுதாரர்கள் ஆகியோருக்கு வழக்கில் சம்மன் சர்வ் செய்யும் பொருட்டு 10 முதல் 13 எதிர்மனுதாரர்கள் கடைசியாக வாழ்ந்த முகவரிக்கு தினசரி நாளிதழில் விளம்பரம் செய்ய சமூகம் நீதிமன்றத்தார் அவர்களால்உத்தரவிடப்பட்டுள்ளது.ஷை உத்தரவிற்கிணங்க10 முதல் 13 எதிர்மனுதாரர்கள் / 3-ம் பிரதிவாதியின் வாரிசுதாரர்கள் மேற்கண்ட வழக்கில் மேற்கண்ட நீதிமன்றத்தில் வருகின்ற **14.07.2026-ம்** தேதி காலை 10.30 மணிக்கு நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி ஆட்சேபனை தெரிவிக்கலாம். தவறும்பட்சத்தில்யாருக்கும்ஆட்சேபனை இல்லை என்று வழக்கில் ஒரு தலைபட்ச உத்தரவுபிறப்பிக்கப்படும் என்பதைஇதன் மூலம் அறியவும்.
S.விஜயன், வழக்கறிஞர்

பத்திரம் காணவில்லை

திருச்சி மாவட்டம், காவேரி மருத்துமவனை அருகில், அலெக்ஸாண்ட்ரியா ரோடு, அலெக்ஸாண்ட்ரியா அபார்ட்மெண்ட்ஸ், எஃப் 6, எண்.13 என்ற முகவரியில் வசித்து வரும் லேட். திரு.ஜாபர் அலிகான் அவர்களின் மகன் **முகமது கவுஸ் கான்** என்கிற நான் கடந்த 21.06.2026 அன்று மதியம் எனது ஒரிஜினல் செட்டில்மெண்ட் பத்திரத்தை டூவீலரில் வைத்துக் கொண்டு தஞ்சை ஞானம் நகர் அருகில் உள்ள பங்கில் பெட்ரோல் போடும் போது பத்திரம் தவறி எங்கேயோ விழுந்து விட்டது. இதுகுறித்து காவல் துறைக்கு இணையம் வழியாக புகார் செய்துள்ளேன். (புகார் எண்: OLC6022600031177, Dt: 22.06.2026) மேற்படி ஆவணங்களை எவராவது எடுத்திருந்தால் கீழ்கண்ட தொலைபேசி எண்ணிற்கு தொடர்பு கொள்ளவும்.
முகமது கவுஸ் கான், Cell: 9994488250

பேங்க் ஆஃப் பரோடா Bank of Baroda
மெலட்டூர் கிளை
நெ. 26, சாலை தெரு, மெலட்டூர், பாபநாசம்-TK
தஞ்சாவூர் - 614 301. போன் : 04374-273432
e-mail : melatt@bankofbaroda.bank.co.in

(baanknet போர்ட்டலில் நடத்தப்படும் ஏலத்திற்கான செய்தித்தாள்களில் வெளியிடப்படும் சுருக்கமான விற்பனை அறிவிப்பு)

அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு

பிற்சேர்க்கை IV-Aயின்படி (விதி 6(2) மற்றும் 8(6)யை பார்க்கவும்)

2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் அமலாக்கச்சட்டம் விதிகளின் கீழ் 6(2) மற்றும் 8(6) இன் கீழ் வைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்களை மின் ஏலம் மூலம் விற்பனை செய்தல் அறிவிப்பு.

கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் ஆகியோருக்கு குறிப்பாகவும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிட்டுள்ள சொத்துக்களை **பாங்க் ஆஃப் பரோடா வங்கி**யின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் சுவாதீனம் செய்யப்பட்ட கீழே உள்ள சொத்துக்கள் **''எங்கு உள்ளதோ அப்படியே'' ''எப்படி உள்ளதோ அப்படியே'' மற்றும் '' என்ன இருக்கிறதோ அதே நிலையில்''** என்ற அடிப்படையில் வங்கியில் பெறப்பட்ட கடனுக்காக கீழே குறிப்பிட்டுள்ள கடன் மற்றும் செலவுகளை திரும்பப் பெறும் நோக்கத்துடன் மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் விபரம், நிலுவைத் தொகை விபரம், சொத்து விபரம் குறைந்தபட்ச கேட்பு விலை, மின்னணு ஏலத் தேதி மற்றும் நேரம், டேவணித் தொகை மற்றும் ஏல அதிகரிப்பு தொகை ஆகியவை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் பெயர்கள் மற்றும் முகவரி : 1) திருமதி. K.S.சித்ரா, க/பெ. சுரேஷ்குமார், நெ. 2034, வனதுர்கா நகர், மனோஜ்பட்டி, தஞ்சாவூர் தாலுக்கா, தஞ்சாவூர் - 613004